## புது நெல்லு.. புது நாத்து

## 25.4.12




மகசூல் குறைவாகக் கிடைத்தாலும் பரவாயில்லை. பாரம்பரிய ரகங்கள் அழிந்துவிடக் கூடாது என்று பாரம்பரிய நெல் ரகங்களைத் தேடிப்பிடித்து சாகுபடி செய்யும் விவசாயிகள் பலர் இருப்பதைப் போல்.. பல்கலைக் கழகங்கள்.. ஆராய்ச்சி நிலையங்கள் வெளியிடும் புதுப்புது ரகங்களையும் உடனடியாக சோதனை செய்து பார்க்கும் விவசாயிகளும் உண்டு. அத்தகையோரில் ஒருவர்.. திருவண்ணாமலை மாவட்டம், நயம்பாடி மோட்டூர் கிராமத்தைச் சேர்ந்த சிவலிங்கம். இவர் இந்திய வேளாண் கழகம் வெளியிட்டிருக்கும் மேம்படுத்தப்பட்ட பூசா பாசுமதி 1, பூசா பாசுமதி ஹைபிரீட் -10, நெல் ஆராய்ச்சி இயக்குநரகம் வெளியிட்டிருக்கும் வாசுமதி, சுகந்தாமதி, ஆடுதுறை ஆராய்ச்சி நிலையம் வெளியிட்டிருக்கும் ஆடுதுறை – 49 மாதிரியான நெல் ரகங்களை என்னோட நிலத்தில் பயிர் செய்திருக்கிறேன். இதெல்லாம், இந்த இரண்டு வருடத்தில் வெளியிடப்பட்ட ரகங்கள், பூச்சி, நோய் தாக்குதலை சாமாளித்து நிற்பதோடு, நல்ல மகசூலும் கொடுக்கிறது என்றார்.

**தனித்தனி சிறப்புகள் !**

ஒவ்வொரு ரகத்திற்கும் ஒரு தனி சிறப்பும் இருக்கு. வாசுமதி, சுகந்தாமதி இரண்டிலும் நல்ல வாசனை இருக்கும். பொங்கல், பிரியாணி என்று விதம் விதமாக சமைக்கலாம். மேம்படுத்தப்பட்ட பூசா பாசுமதி – 1 ரகத்தை, குருத்துப்பூச்சி தாக்காது, பூசா பாசுமதி ஹைபிரீட் -10 ரகம், ஒரு ஹெக்டேருக்கு 10 டன் வரைக்கும் மகசூல் கொடுக்கும். ஆடுதுறை 49, மழை காற்று எல்லாவற்றையும் சமாளித்து நிற்கும் சன்ன ரகம். இந்த ரகங்களையெல்லாம் சாகுபடி செய்வதற்கு,

குறைவான அளவில்தான் ரசாயன உரத்தைப் பயன்படுத்தினேன். பூச்சிக்கொல்லிகளை துளிகூட பயன்படுத்தவே இல்லை.

**சோதனை முறை சாகுபடி!**

மொத்தம் நான்கு ஏக்கர் பாசன நிலமும், ஐந்து ஏக்கர் மானாவாரி நிலமும் இருக்கு. 1 ஏக்கரில் ஆடுதுறை – 49, 30 சென்ட் நிலத்தில் வாசுமதி, 30 சென்ட் நிலத்தில் சுகந்தாமதி, 39 சென்ட் நிலத்தில் மேம்படுத்தப்பட்ட பூசா பாசுமதி – 1, 30 சென்ட் நிலத்தில் பூசா பாசுமதி ஹைபிரீட் -10 இப்படி மொத்தம் இரண்டு ஏக்கர் 20 சென்ட் நிலத்தில் சாகுபடி செய்தேன்.

**நிறைவான மகசூல் !**

ஒரு ஏக்கரில் விதைத்த ஆடுதுறை – 49 நெல்லில் 33 மூட்டை ( 75 கிலோ மூட்டை) மகசூல் கிடைத்தது. 30, 30 சென்ட் நிலத்தில் போட்டிருந்த சுகந்தாமதி, வாசுமதி, மேம்படுத்தப்பட்ட பூசா பாசுமதி – 1, பூசா பாசுமதி ஹைபிரீடு – 10 ஒவ்வொன்றிலும் தனித்தனியாக ஏழு மூட்டை ( 75 கிலோ மூட்டை) மகசூல் கிடைத்தது. விதைநெல்லாத்தான் எப்பவும் விற்பனை செய்வது வழக்கம். இந்த முறை, ஆடுதுறை – 49 ரக நெல்லை கிலோ எப்பவும் விற்பனை செய்வது வழக்கம். இந்தத் தடவை, ஆடுதுறை – 49 ரக நெல்லை கிலோ 25 ரூபாய் என்றும் மற்ற ரகங்களை கிலோ 50 ரூபாய் என்றும் கொடுக்கலாம் என்று இருக்கிறேன். இந்த விலையில் விற்றால் ... ஆடுதுறை -49 ரகம் மூலமாக 61 ஆயிரத்து 875 ரூபாய் கிடைக்கும். மற்ற ரகங்கள் மூலமாக, 1 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். எல்லாவற்றையும் கூட்டினால்... 1,66,875 ரூபாய் கிடைக்கும். செலவெல்லாம் கழித்தால்.. 1,40,000 ரூபாய் வரைக்கும் லாபமாக கையில் நிற்கும் என்றார் சிவலிங்கம்.

எப்பவும் இந்த மாதிரி புது ரகங்களுக்கு ரசாயன உரங்களைத்தான் பரிந்துரை செய்வாங்க. அதனால்தான் நான் கொஞ்சமாக ரசாயனத்தைப் பயன்படுத்த வேண்டியதாகியது. அடுத்த சம்பா பட்டத்தில் இந்த ரகங்களையெல்லாம் முழு இயற்கை முறையிலேயே சாகுபடி செய்து நல்ல மகசூல் எடுக்க தீர்மானித்திருக்கிறேன். அது கிடைக்கும் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கு. ஏனென்றால் இதற்கு முன் ‘அக்ஹோனி போரா’ நெல் ரகத்தை, முழுக்க இயற்கையில் சாகுபடி செய்துதான் மகசூல் எடுத்தேன். இப்பவே, மண்புழு உரம் தயாரிப்பு, அசோலா வளர்ப்பு என்று முன்னேற்பாடுகளை செய்ய ஆரம்பித்துவிட்டேன். முழு இயற்கையில் சாகுபடி செய்யும் போது கிட்டத்தட்ட மூன்றாயிரம் ரூபாயிலிருந்து ஐயாயிரம் ரூபாய் வரை ரசாயன உரங்களுக்கான செலவை மிச்சப்படுத்தலாம். கூடுதல் மகசூலும் கிடைக்க வாய்ப்பிருக்கு. இயற்கை முறையில் விளைவித்தால்.. கூடுதல் விலைக்கும் விற்க முடியும் என்றார்.

**ஏக்கருக்கு 5 கிலோ விதை !**

இந்தப் புதிய ரகங்கள் அனைத்துமே அனைத்து மண் வகைகளிலும் வளரக்கூடிய தன்மை கொண்டவை. அனைத்துப் பட்டங்களுக்கும் ஏற்றவை. ஒரு ஏக்கருக்கு 5 கிலோ விதை தேவைப்படும். நான்கு லிட்டர் தண்ணீரில் ஒரு கிலோ சாணம், ஒரு லிட்டர் மாட்டு சிறுநீர் ஆகியவற்றைக் கலந்து, விதையை ஒரு மணி நேரம் ஊற வைத்து எடுத்து.. தண்ணீரில் 12 மணி நேரம் இருட்டறையில் வைத்திருந்து, மறுநாள் நாற்றங்காலில் விதைக்க வேண்டும்.

**15 நாட்களில் நாற்று !**

ஒரு ஏக்கருக்கு ஒரு சென்ட் அளவில் நாற்றங்கால் அமைக்க வேண்டும். நாற்றங்கால் நிலத்தை நன்கு உழுது சமப்படுத்தி, இரண்டு அங்குல உயரத்திற்கு தண்ணீர் நிறுத்தி, விதைநெல்லைத் தூவி விதைக்க வேண்டும். 12 மணி நேரத்திற்குப் பிறகு தண்ணீரை வடித்துவிட வேண்டும். தொடர்ந்து மூன்று நாட்கள் தண்ணீரை இப்படி நிறுத்தி, வடிக்க வேண்டும். அதன் பிறகு, தண்ணீரை வடிக்க வேண்டிய அவசியமில்லை. 15 –ம் நாளில் நாற்று தயாராகி விடும்.

**முக்கால் அடி இடைவெளி!**

நடவிற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பிருந்தே வயலைத் தயார் செய்ய ஆரம்பித்துவிட வேண்டும். வயலில் இரண்டு உழவு செய்து, ஏக்கருக்கு 5 கிலோ சணப்பு என்கிற விகிதத்தில் விதைத்து, 55 நாட்களுக்குப் பிறகு பூ எடுத்தவுடன் ரோட்டாவேட்டர் மூலம் மடக்கி உழவு செய்ய வேண்டும். பிறகு, வயலை சேறாக்கி, ஒரு ஏக்கருக்கு 100 கிலோ ஜிப்சம், 40 கிலோ டி.ஏ.பி, 5 கிலோ நுண்ணூட்ட உரம் ஆகியவற்றை கலந்துஇட வேண்டும். தலா இரண்டு கிலோ கிலோ அசோஸ்பைரில்லம், பாஸ்போ – பாக்டீரியா ஆகியவற்றை 20 கிலோ மட்கிய எருவில் கலந்து ஒரு நாள் வைத்திருந்து, வயலில் தூவி, முக்கால் அடி இடைவெளியில் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். 15 முதல் 19 நாட்கள் வயதுள்ள நாற்றாக இருந்தால்.. ஒரு குத்துக்கு ஒரு நாற்று என நடவு செய்ய வேண்டும். அதற்கு மேல் வயதிருந்தால், ஒரு குத்துக்கு இரண்டு நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். தொடர்ந்து காய்ச்சலும் பாய்ச்சலுமாக தண்ணீர் கட்டி வர வேண்டும்.

**பூச்சிக்கு வசம்புத்தூள் !**

நடவு செய்த 20 – ம் நாளில் கோனோ வீடர் மூலம் களைகளை அழுத்திவிட வேண்டும். 35 – ம் நாளில் ஆட்கள் மூலம் களை எடுத்து 15 கிலோ யூரியா, 15 கிலோ பொட்டாஷ் ஆகியவற்றைக் கலந்து வயலில் இட வேண்டும். 60 மற்றும் 75 – ம் நாட்களில் 10 கிலோ வசம்புத் தூளை வயலில் தூவிவிட வேண்டும். இது பூச்சித் தாக்குதலைக் கட்டுப்படுத்தும்.. மேம்படுத்தப்பட்ட பூசா பாசுமதி – 1, பூசா பாசுமதி ஹைபிரீடு – 10 ஆகிய ரகங்களை 110 நாட்களுக்கு மேல் அறுவடை செய்யலாம் ( இவற்றின் மொத்த வயது 125 நாட்கள்) சுகந்தாமதி, வாசுமதி, ஆடுதுறை – 49 ஆகிய

ரகங்களை நடவு செய்த 115 நாட்களுக்கு மேல் அறுவடை செய்யலாம். ( இவற்றின் மொத்த வயது 130 நாட்கள்).

**தொடர்புக்கு**

**சிவலிங்கம், செல்போன் : 77084 – 13085**